தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 12-12-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## டிசம்பர் 2015 மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு - கட்டுப்பாட்டு முறைகள்

டிசம்பர் 2015 மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு - கட்டுப்பாட்டு முறைகள் குறித்து பயிர் பாதுகாப்பு மையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் அறிக்கை.

**நெல் பயிரிடும் கடலோர மாவட்ட விவசாயிகளின் கவனத்திற்கு**

கடலோர மாவட்டங்களில் காற்றழுத்தத் தாழ்வுநிலையால் மேகமுட்டத்துடன் கூடிய வானிலையும் காற்றில் அதிக ஈரப்பதமும் 3 அல்லது 4 நாட்கள் காணப்பட்டால், நெல்பயிரில் குலைநோய் தென்பட அதிக வாய்ப்புண்டு. விவசாயிகள் உடனே 0.1 சதம் ட்ரைசைக்கிலோசோல் மருந்தினை நோய் தாக்கியவுடன் பயிர்களில் தெளிக்கவும் தேவைப்படின் 10 நாட்கள் இடைவெளியில் மறுமுறை தெளிக்கவும்.

மற்றும் பாக்டீரியா இலை நோயை கட்டுப்படுத்த கோசைடு 101 என்ற மருந்தை 2.5 கிராம் / 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும் தழைச்சத்தை மூன்று முறை பிரித்து இடவும்.

இலைப்புள்ளி நோயை கட்டுப்படுத்த மான்கோசாப் (2.0 கிராம் / லிட்டர் தண்ணீருக்கு) 2 முறை நட்ட 40 மற்றும் 55 நாட்களுக்குப் பின்னர் பயிர்களில் தெளிக்கவும்.

**நெல் வயல்களில் பூச்சி மேலாண்மை**

**இலை சுருட்டுப்புழு**

தற்போது நிலவும் தொடர் மழை மற்றும் பனி மூட்டமான சூழ்நிலை காரணமாக நெல்லில் இலை சுருட்டுப்புழு தாக்குதலுக்கு வாய்ப்புள்ளது. இளம் பயிர்கள், தூர் பிடிக்கும் பருவத்தில் உள்ள பயிர்களை தாக்கும் இந்த புழுக்கள் இலைகளை உள்பக்கமாக சுருட்டி உள்ளிருந்து பச்சையத்தை சுரண்டி உண்கின்றன. இதனால் இலைகள் வெள்ளை நிற சுரண்டல்களுடன் காணப்படும். தாக்குதல் அதிகமானால் செடிகள் காய்ந்து விடும். இப்பூச்சியின் தாக்குதல் இருக்கும் சமயம் தழைச்சத்து உரங்களை வயலில் இடுவதை குறைக்க வேண்டும். வயலில் இப்புழுவின் அந்தி பூச்சிகளின் நடமாட்டத்தை அறிந்து விளக்கு பொறி வைத்து கவர்ந்து அழிக்கலாம். தாவர

*பூச்சிக்கொல்லியான அசாடிரக்டீன் **0.03** சதக் கரைசலை ஏக்கருக்கு **400** மி.லி என்ற அளவில் தெளிக்கலாம். இரசாயன பூச்சிக்கொல்லிகளான கார்டஃப் **50** சத பவுடர் **400** கிராம் / ஏக்கர் (அல்லது) குளோர்பைரிபால் **20** EC **500** மி.லி / ஏக்கர் என்ற அளவில் உபயோகித்து கட்டுப்படுத்தலாம்.*

***புகையான்***

*நெல் வயலில் அதிகமாக நீர் தேங்கி வெளியேற்ற முடியமால் உள்ள இடங்களில் இந்த பூச்சிகளின் தாக்குதல் அதிகமாக இருக்கும். நெல்லின் தண்டு பகுதியில் கூட்டமாக அமர்ந்து சாறு உறிஞ்சும் இந்த பூச்சிகளால் நெற்பயிர் முற்றிலுமாக காய்ந்து விடும். தாக்குதல் அதிகம் உள்ள வயல்களில் எரித்தது போன்ற அறிகுறிகள் ஆங்காங்கே தென்படும். தழைச்சத்து உரங்களை **3-4** முறை பிரித்து இட வேண்டும். செயற்கை பைரித்திராய்டு மற்றும் பூச்சிகளின் மறு உற்பத்தியை தூண்டும் பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்த கூடாது. **3** சத வேப்ப எண்ணெய் கரைசலை ஏக்கருக்கு **6** லிட்டர் என்ற அளவில் சோப்பு கரைசலுடன் கலந்து தெளிக்க வேண்டும். பூச்சிக் கொல்லிகளான டைக்குளோர்வாஸ் **76** SC **200** மி.லி / ஏக்கர் (அ) ஃபுப்ரோபசின் **25** SC **325** மி.லி / ஏக்கர் (அ) பிப்ரோனில் 5% SC **400** மி.லி / ஏக்கர் (அ) இமிடாகுளோபிரிட் 17.8% SL **40** மி.லி / ஏக்கர் என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.*

***குருத்துப்பூச்சி***

*இப்புழுக்கள் இளம் பயிரின் தண்டில் துளையிட்டு அதன் அடிப்பாகத்தில் இருந்து கொண்டு உட்பகுதியை கடித்து உண்பதால் இளம் பயிரின் நடுக்குருத்து வாடி காய்ந்து விடும். அவ்வாறு வாடிய நடுக்குருத்தை லேசாக இழுத்தால் கையோடு வந்து விடும். கதிர் பிடிக்கும் பருவத்தில் தாக்குதல் தொடர்ந்தால் வெளிவரும் கதிரில் மணிகள் பால் பிடிக்காமல் வெண்கதிர்களாக மாறுகின்றன. அதனால் மகசூல் பெருமளவு பாதிக்கப்படும். முட்டை ஒட்டுண்ணியான ட்ரைக்கோகிரம்மா ஜப்பானிக்கம் ஒட்டுண்ணி அட்டைகளை ஒரு ஏக்கருக்கு **5** சிசி என்ற அளவில் வார இடைவெளியில் மூன்று முறை கட்ட வேண்டும். தாவரப்பூச்சிக் கொல்லியான அசாடிரக்டீன் **0.03** சத கரைசலை ஒரு ஏக்கருக்கு **400** மி.லி. என்ற அளவில் தெளிக்க வேண்டும். தாக்குதல் அதிகமாக காணப்படும் போது் இரசாயன பூச்சிக் கொல்லிகளான கார்டஃப் **50** சத பவுடர் **400** கிராம் / ஏக்கர் (அல்லது) குளோர்பைரிபால் **20** EC **500** மி.லி / ஏக்கர் (அல்லது) பிப்ரோனில் 5% SC **400** மி.லி / ஏக்கர் என்ற அளவில் உபயோகித்து கட்டுப்படுத்தலாம்.*

***கதிர் நாவாய் பூச்சி***

*பூக்கும் தருணத்தில் இளம் மற்றும் வளர்ந்த பூச்சிகள் அதிகாலை மற்றும் மாலை நேரங்களில் மணிகளில் உள்ள சாற்றை உறிஞ்சுவதால் மணிகளில் பழுப்பு நிற புள்ளிகள் தோன்றி பதராகிவிடும். அறுவடைக்குப்பின் உள்ள கட்டை பயிரிலும் இப்பூச்சிகள் தங்கியிருந்து இனப்பெருக்கம் அடைகின்றன. எனவே கட்டைப்பயிர் விடுவதை தவிர்ப்பது அவசியம். **5** சதம் வேப்பம் கொட்டை சாறு தெளிக்கலாம். ஒரு ஏக்கருக்கு மாலத்தியான் **200** மிலி. தெளித்தும் கட்டுப்படுத்தலாம்.*

*கூண்டுப்புழு*

*இவை இலைகளின் பச்சையத்தை சுரண்டி உண்ணுவதால், இலைகள் வெள்ளைநிறக் காகிதம் போல் தோன்றும். இலைகள் வெட்டப்பட்டு தூர்களைச் சுற்றி குழாய் வடிவ கூண்டுகள் காணப்படும். வயலில் தேங்கி இருக்கும் தண்ணீரில் சிறிது மண்ணெண்ணெய் கலந்து விட்டு பின்னர் தூர்களிலிருக்கும் குழல் வடிவ கூண்டுகளை, பயிர்களின் குறுக்கே கயிரைப் போட்டு இழுத்து நீரில் விழச்செய்து, பின் வயலிலுள்ள நீரை வடித்து புழுக்களை அழிக்கலாம். தேவை ஏற்படின் பூச்சிக்கொல்லிகள் ஆன கார்பரைல் 10 சதம் டி.பி யை 10 கிலோ / ஏக்கர் அல்லது பென்தோயேட் 50 சதம் இ.சி. 400 மில்லி / ஏக்கர் என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.*

*பருத்தி*

*காய் புழுவின் தாக்குதலைக் கட்டுப்படுத்த இனக்கவர்ச்சி பொறிகளை ஏக்கருக்கு 5 வைத்து அந்துப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம். அதிகம் சேதம் உள்ள பயிர்களில் குளோர்பைரிபாஸ் 20 இ.சி – 800 மில்லி / ஏக்கர் அல்லது பாசலோன் 35 இ.சி – 600 மில்லி / ஏக்கர் என்ற அளவில் தெளிக்கலாம்.*

*பருத்தி செடியில் சாறு உறிஞ்சும் தத்துப் பூச்சிகளின் நடமாட்டத்தைக் ஏக்கருக்கு 5 என்ற அளவில் மஞ்சள் ஒட்டும் பொறி வைத்து பூச்சிகளைக் கண்காணிக்கவும் தேவைப்படின் இமிடோகுளோபிரிட் 200 எஸ்.எல் 400 மில்லி ஒரு ஏக்கருக்கு என்ற அளவில் தெளிக்கவும்.*

**வேர் அழுகல் நோய்**

*பாதிக்கப்பட்ட இடத்தில் கார்பென்டாசிம் 1 கிராம்/ லிட்டர் என்ற விகித்தில் கலந்து ஊற்ற வேண்டும்.*

*கரும்பு*

*தண்டுத்துளைப்பான் தாக்குதலைக் கட்டுப்படுத்த முட்டை ஒட்டுண்ணி ட்ரைக்கோகிரமா (1 சிசி) ஒரு ஏக்கருக்கு பயன்படுத்தவும். இதனை 6 முறை 15 நாட்கள் இடைவெளியில் பயன்படுத்தவும்.*

***நிலக்கடலை***
***இலைச்சுருட்டுப்புழு***

*இலைச்சுருட்டுப்புழு தாக்குதலைக் கட்டுப்படுத்த அந்து பூச்சிகளின் நடமாட்டத்தை விளக்குப்பொறி வைத்து கண்காணிக்கவும். மாலத்தியான் 50 இ.சி. 500 மில்லி / ஏக்கர் என்ற அளவில் தெளிக்கலாம்.*

*சிவப்பு கம்பளிப்புழு*

*மின்சார வசதி உள்ள இடங்களில் விளக்குப் பொறியை மாலை 7 முதல் 10 மணி வரை எரியவிட்டு, வெண்ணிற அந்துப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம். பயிரில் இலையினடியில் முத்துப் போன்று குவியலாக இருக்கும் முட்டைக் குவியல்களையும், கண்ணாடி போன்று சுரண்டப்பட்ட இலைகளில் கூட்டமாகக் காணப்படும் இளம் புழுக்களையும், இலையோடு கிள்ளி*

எடுத்து அழிக்கலாம். இளம் பருவ புழுக்களை ஃபாஸலோன் 35 இ.சி மருந்து 300 மிலி / ஏக்கர் அல்லது டைக்குளோர்வார்ஸ் 76 எஸ்.ஸி 250 மி.லி / ஏக்கர் தெளித்துக் கட்டுப்படுத்தலாம்

வேரழுகல் நோய்த்தாக்குதல் உள்ள பகுதிகளில் கார்பன்டாசிம் (0.1%) மருந்தை வேர்கள் நனையுமாறு ஊற்றவும்.

கடலையில் டிக்கா இலைப்புள்ளி நோயை கட்டுப்படுத்த கார்பன்டாசிம் (1 கிராம் / லிட்டர்) அல்லது மான்கோசாப் (2 கிராம் / லிட்டர்) அல்லது குளோர்தலானில் (2 மில்லி / லிட்டர்) தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**மக்காச்சோளம்**

**தண்டு துளைப்பான்**

தண்டுதுளைப்பானை கட்டுப்படுத்த அந்து பூச்சிகளின் நடமாட்டத்தை விளக்குப்பொறி வைத்து கண்காணிக்கவும். தேவை ஏற்படின், கார்போபியுரான் 3 ஜி 6.8 கிலோ / ஏக்கர் என்ற அளவில் 20 கிலோ மணலுடன் கலந்து குருத்தில் இடவும்.

**காய்த்துளைப்பான்**

தண்டுதுளைப்பானை கட்டுப்படுத்த அந்து பூச்சிகளின் நடமாட்டத்தை விளக்குப்பொறி வைத்து கண்காணிக்கவும். இனக் கவர்ச்சி பொறி 5, ஏக்கருக்கு வைத்து ஆண் அந்துப் பூச்சிகளை கவர்ந்து அழிக்கவும். கார்பரைல் 50 டபிள்யூ பி 0.4 கிலோ / ஏக்கருக்கு என்ற அளவில் தெளிக்கவும்.

**அடிச்சாம்பல் நோய் :** எக்டருக்கு மெட்டாலாக்ஸில் 500 கிராம் அல்லது மேன்கோசெப் 1 கிலோ தெளிக்கவும்.

**இலைக்கருகல் நோய்:** மேன்கோசெப் 2 கிராம் / லிட்டர் என்ற அளவில் விதைத்த 20-ம் நாள் தெளிக்கவும்.

**பாசிப்பயறு மற்றும் உளுந்து**

**வெள்ளை ஈ**

பாசிப்பயறு மற்றும் உளுந்து பயிரில் தென்படும் மஞ்சள் தேமல் நோயை கட்டுப்படுத்த விவசாயிகள் டைமித்தோவேட் 200 மில்லி / ஏக்கர் அல்லது மிதைல் டிமட்டான் 200 மில்லி / ஏக்கர் என்ற அளவில் தெளிக்கலாம்.

**காய்த்துளைப்பான்**

அசாடிரக்டீன் 0.03 சத கரைசலை ஒரு ஏக்கருக்கு 400 மி.லி. என்ற அளவில் தெளிக்க வேண்டும். டைமித்தோவேட் 200 மில்லி / ஏக்கர் அல்லது இமாமெக்டின்பென்சோயேட் 5 சத எஸ்சி 88 கிராம் அல்லது இன்டாக்சோகார்ப் 15.8 எஸ்சி 133 மிலி அல்லது வேப்பங்கொட்டை சாறு (5%) தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

**காய் நாவாய் பூச்சி**

அசாடிரக்டீன் 0.03 சத கரைசலை ஒரு ஏக்கருக்கு 400 மி.லி. என்ற அளவில் தெளிக்க வேண்டும். இமாமெக்டின்பென்சோயேட் 5 சத எஸ்சி 88 கிராம் அல்லது இன்டாக்சோகார்ப் 15.8 எஸ்சி 133 மிலி அல்லது வேப்பங்கொட்டை சாறு (5%) தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

**சாம்பல் நோய்**

எக்டேர் ஒன்றுக்கு கார்பன்டாசிம் 250 கிராம் அல்லது நனையும் கந்தகத் தூள் 2500 கிராம் / எக்டர் தெளிக்கவும்

**வேர் அழுகல் நோய்**

பாதிக்கப்பட்ட இடத்தில் கார்பென்டாசிம் 1 கிராம்/ லிட்டர் என்ற விகிதத்தில் கலந்து ஊற்ற வேண்டும்.

**தக்காளி**

தக்காளி இலைக்கருகல் நோய்த் தாக்குதலை கட்டுப்படுத்த விவசாயிகள் மான்கோசாப் என்ற மருந்தை, ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் என்ற விகிதத்தில் கலந்து வாரமிருமுறை தெளிக்கவும்.

**விவசாய மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் கட்டுப்பாடு**

சாறு உறிஞ்சும் பூச்சிகளான தத்துப்பூச்சி, இலைப்பேன், வெள்ளை ஈ, சுருள் வெள்ளை ஈ மற்றும் மாவு பூச்சியின் சேதம் அதிகமாக வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் மஞ்சள் ஒட்டும் பொறி 5 / ஏக்கர் வைத்து நடமாட்டத்தை கண்டறியலாம். தேவைப்படின் வேப்பங்கொட்டைச்சாறு 5 சதம் அல்லது மீன் எண்ணை சோப் 1 கிலோ 40 லிட்டர் தண்ணிருக்கு என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தவும்.

**தகவல்**

இயக்குநர்,
பயிர் பாதுகாப்பு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் – 641 003.
தொலைபேசி: 0422-6611237

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வேளாண் பூச்சியியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் – 641 003.
தொலைபேசி: 0422-6611214 / 6611414.

பேராசிரியர் மற்றும் தலைவர்,
பயிர் நோயியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் – 641 003.
தொலைபேசி: 0422-6611226

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்